பாலாறு படுகை வட்டாரத்தில் மின் இணைப்புக்கான நிபந்தனைகள்.

*வினா எண் 968 திரு. சி. கோபால் :—மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் பாலாறு படுகை வட்டாரத்தில் விவசாயிகள் மின் இணைப்புப் பெறுவதற்கு தனி நிபந்தனைகள் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—ஆம். பாசனத் துறையின் ஆணைக்கிணங்க பாலாறு படுகை வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவா வழங்கும் அனுமதியின் அடிப்படையில்தான் மின் இணைப்புகள் வழங்கப் படுகின்றன.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவா களே, பாலாறு படுகை வட்டாரத்திலே விவசாயிகள் மின் இணைப்புப் பெறுவதற்கு இருக்கிற நிபந்தனைகள் என்னென்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எந்த ஒரு கிணற்றிலும் கீழ்க்கண்ட திறனுக்கு மேற்படும் பம்ப் செட்களைப் பயன்படுத்துதல் கூடாது. அது ஜீவ நீரூற்றுகள் 400 மீட்டருக்கு அப்பால் 8 ஹார்ஸ் பவர்; ஜீவ நீரூற்று வழிகள் 200 மீட்டரிலிருந்து 400 மீட்டர் வரை 5 ஹார்ஸ் பவர்; 400 மீட்டருக்கு அப்பால் 8 ஹார்ஸ்பவர்; மற்ற நீர் பிறப்பிடங்கள் 50 மீட்டருக்கு அப்பால் 100 மீட்டருக்குள் 9 ஹார்ஸ் பவர், 100 மீட்டருக்கு அப்பால் 8 ஹார்ஸ் பவர். புதிய பம்ப் செட் இணைப்பிற்கு அல்லது ஏற்கனவே இருக்கும் இணைப்பினை வேறு இடத்திற்கு மாற்ற மின்சார வாரியம் அனுமதி வழங்கு முன் மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த அடிப்படையிலே அனுமதி அளிக்க வேண்டும்.

திரு. சி. கோபால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மின் இணைப்புப் பெறுவதற்கு விவசாயிகள் நிலத்தடி நீர் சான்றிதழ் பெற வேண்டுமென்ற நிலையை நம்முடைய புரட்சித் தலைவர் அரசுதான் மாற்றியது. அதைப்போல், இங்கே குறிப் பிட்டு இருக்கிற சில நிபந்தனைகளையும் மாற்றி, மின் இணைப்பு தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே ஏற்கனவே ஆற்றுப் பாசனம், வாய்க்கால் பாசனத்தைப் பெற்று வருகின்ற விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படாத வகையில் இந்த மின்சார பம்பு செட்கள் அமைக்கப்பட வேண்டும். அதற்காகவே

1981 மே 5]

இந்த விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஆற்றுப் பாசனத்தைப் பெற்று வருகின்றவர்களைப் பாதுகாக்கின்ற வகையில் அரசு அதை மாற்ற இயலாது.

திரு. ஏ சி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே வட ஆற்காடு மாவட்டத்தில் பாலாறு படுகை வட்டாரத்தில் எவ்வளவு கிராமங்கள் மின் இணைப்புப் பெற முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கின்றன? நிபந்தனைகளுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாத கிராமங்கள் எல்லாம் இந்தப் பாலாறு படுகையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்தக் கிராமத்திலும் இன்னும் மின்சாரம் வழங்காமல் பாதிக்கப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல் இல்லை. கிட்டத்தட்ட எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கியிருக்கிறோம். பாலாற்றுப் படுகையிலே சில பம்ப் செட்களுக்கு வழங்கப்பட முடியவில்லையென்று அதற்காகத்தான் இந்த விசேஷ சட்டங்கள் இருக்கின்றன, விதி முறைகள் இருக்கின்றன. அவற்றை மாற்றியமைத்து அவர்களுக்கு மின்சாரம் வேண்டுமென்றாலோ, அல்லது பாலாற்றுப் படுகைக்கும் அந்தக் கிராமங்களுக்கும் சம்பந்தம் இல்லையென்றாலோ, அதைச் சொல்ல வேண்டியவர் மாவட்ட ஆட்சித் தலைவர்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலாற்றுப் படுகை சான்றிதழ் பெற வேண்டி விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். குறிப்பாக, குடியாத்தம் தொகுதியைப் பொறுத்த வரையிலே பாலாற்றுப் படுகையை ஒட்டி 3, 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு இந்தச் சட்டம் இல்லை. ஆனால் 10 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் தள்ளியிருக்கிற கிராமங்களுக்கு இந்தச் சட்டம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதனை அகற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பாசன விதிகளை மாற்ற வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர்கள் பாசனத்துறை அமைச்சருக்கு அதுபற்றி விரிவாகக் கடிதம் எழுதலாம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது புதிய மின் இணைப்புகள் கொடுக்கக் கூடாது என்று உத்தரவுகள் எதுவும் அனுப்பப்பட்டிருக்கிறதா? அப்படி அனுப்பப்பட்டதற்கான காரணங்கள் என்ன? அது எப்பொழுது தளர்த்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது விவசாயிகளுக்கு மின் இணைப்பு இரவில்தான் கொடுக்கப்படுகிறது. பகலிலே கொடுப்பதில்லை. அதனால் இரவு வயலுக்குப் போகும்போது பாம்பு கடித்து இறந்துவிடுகிறார்கள். இரவில் வெட்டு, குத்தெல்லாம் நடக்கிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

குமரி மாவட்டம் அஞ்சு கிராமத்தில் மின் நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 969 திரு. க. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் அஞ்சு கிராமத்தில் 33 KV மின் நிலையம் (Transformer) அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) 110/11 கே.வி. மின் நிலையம் ஒன்று ரூபாய் 47 இலட்சம் செலவில் அஞ்சு கிராமத்தில் அமைப்பதற்காக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஜோலார்பேட்டைக்கு அருகே சிட்கோ மூலம் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 970—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் ஜோலார்பேட்டைக்கு அருகே சிட்கோ மூலம் ஒரு புதிய தொழிற்பேட்டை ஆரம்பிக்க செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் ?